


Madras School of Social Workல் நடைபெற்ற போதைப்பொருள் இல்லா இந்தியாவிற்கான பிரச்சாரம் கூட்டத்தில் தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் திருமதி. புதுக்கோட்டை விஜயா மற்றும் கழக சுற்றுச்சூழல் அணியின் மாநில துணை செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

### சாலை விபத்தில் மரணமடைந்த சேலம் கிழக்கு மாவட்டக்

# கழகத் தோழர் ஆர்.முருகன் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

### இதுவரை 10 கழகக் குடும்பங்களுக்கு ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது!



**சென்னை, நவ.20-**

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த சேலம் கிழக்கு மாவட்டம், ஆர்.முருகன் குடும்பத்திற்கு தி.மு.க. சார்பில் ரூ. 10 இலட்சம் குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார்.**

இதுவரை 10 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்.” என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா – இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க. முத்தமிழ்செல்வன் – ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் – திருவாரூர் மாவட்டத்தைச் எம். விக்னேஷ் – கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி – காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.ராம்பிரசாத் – நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரண்ராஜ் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாசம் – திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மேகலிங்கம் ஆகிய 9 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து;

சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான ஆர்.முருகன் அவர்கள், 21.06.2025 சேலம் அருகே திருவாக்கவுண்டலூர் பை-பாஸ் சாலை அருகில் பேருந்து மோதிய விபத்தில் சிக்கி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி 28.06.2025 அன்று உயிரிழந்த மேற்சொன்ன ஆர்.முருகன் குடும்ப நிவாரண நிதியாக, ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை, தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். முருகன் அவர்களின் மனைவி திருமதி எம். கோமதி அவர்களிடம் நேற்று (19-11-2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.

அதுபோது, கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம், எம்.பி., வீரபாண்டி தெற்கு ஒன்றியச் செயலாளர் திருமதி வெண்ணிலா சேகர், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் டாக்டர் ஏ.கே.தருண் ஆகியோர் உடனிருந்தனர்.

### கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 48 இடங்களில் தெரு முனைக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றியங்களில் வருகின்ற 25.11.2025 அன்று 48 இடங்களில் தெரு முனைக் கூட்டங்கள் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளன.

| தலைமை கழக பேச்சாளர்கள் | ஒன்றியம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| அத்திபட்டு சாம்ராஜ் | உத்திரமேரூர் ஒன்றியம் | தண்டரை, மானாமதி கண்டிகை, இளநகர் |
| முரசொலி மூர்த்தி | சாலவாக்கம் ஒன்றியம் | பேரணக்காவூர், தண்டரை அண்ணாத்தூர் |
| தூத்துக்குடி சரத் பாலா | காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் | நரப்பாக்கம், பெரும்பாக்கம், கிளார் |
| தக்கோலம் தேவபாலன் | காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் | காவாந்தண்டலம், ஆற்ப்பாக்கம், கீழ்பெரமநல்லூர் |
| எழும்பூர் கோபி | வாலாஜாபாத் வடக்கு | செட்டியார் பேட்டை, கூத்திரம்பாக்கம், தொடு ர் |
| கந்திலி கரிகாலன் | வாலாஜாபாத் தெற்கு | அயிமிச்சேரி, குண்ணவாக்கம், வேண்பாக்கம் |
| கரூர் முரளி, நாத்திகம் நாகராஜன் | மதுராந்தகம் வடக்கு | ஜானகிபுரம், வையாவூர், நெல்வாய் |
| சேலம் சுஜாதா | மதுராந்தகம் தெற்கு | கிளார், தேவாத்தூர், சாலையூர் |
| ஆரணி மாலா | அச்சரப்பாக்கம் வடக்கு | ஊனமலை, கூடலூர், தண்டலம் |
| பொன்னேரி சிவா | அச்சரப்பாக்கம் மத்தியம் | பெரும்பேர்கண்டிகை, திருமுக்காடு, சிறுபேர்பாண்டி |
| ஆரூர் மணிவண்ணன் | அச்சரப்பாக்கம் தெற்கு | முருங்கை, கொங்கரைமாம்பட்டு, களத்தூர் |
| விசார் தமிழரசன் | இலத்தூர் வடக்கு | நெடுமரம், வெளிக்காடு, கல்குளம் |
| ஆண்டாள் பிரியதாஷினி | இலத்தூர் தெற்கு | செய்யூர் செங்காடுர், சீக்கினாங்குப்பம் |
| ஈரோடு இளைய கோபால் | சித்தமூர் மேற்கு | சித்தாமூர், பருக்கள், சின்னகயப்பாக்கம் |
| திருப்பூர் ரஜினி செந்தில் | சித்தமூர் கிழக்கு | நாங்களத்தூர், வில்லிப்பாக்கம், மணப்பாக்கம் |
| பவானி கண்ணன் | திருக்கழுக்குன்றம் தெற்கு | பாண்டுர், நல்லாத்தூர், விட்லாபுரம் |

எனவே, சம்பந்தப்பட்ட ஒன்றிய செயலாளர்கள் அந்தந்த பகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பெயர்களை முறையாக அழைப்பிதழில் அச்சிட்டு அவர்களுக்கு வழங்கி எளிய முனையில் தெரு முறைக்கூட்டங்களை நடத்திட ஏற்பாடு செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எவரெஸ்ட் மு. கணேசன்
### நவம்பர் 20 (2011)



பள்ளி பருவத்திலேயே இந்தி திணிப்பை எதிர்த்து போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

தி.மு.க. இளைஞர் அணி துவங்கிய நாளிலிருந்து இளைஞர் அணியின் வளர்ச்சிக்கு பணியாற்றிய அவர், ஈரோடு மாவட்டத்தின் முதல் இளைஞர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்டதோடு, தொடர்ந்து மூன்று முறை அப்பொறுப்பை வகித்தவர்.

தி.மு.க. இளைஞர் அணி மாநில துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர். 1989ஆம் ஆண்டு கழக அரசின் சாதனை விளக்க இளைஞர் அணி பேரணியில் சிறப்பாக பணியாற்றியமைக்காக தலைவர் கலைஞர் அவர்களிடம் விருது பெற்றார்.

ஈரோடு மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் இளைஞர் அணி கிளையை அமைத்தவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில்

## ஆயிரம் விளக்கு தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### தொகுதிப் பொறுப்பாளர் சைதை சாதிக் அறிவிப்பு!

*சென்னை, நவ.20-*

*சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதி பகுதிக் கழக - வட்டக் கழகச் செயலாளர்கள், பாக பொறுப்பாளர்கள் மற்றும் வழக்கறிஞர் அணியை சார்ந்த நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (20.11.2025 வியாழக்கிழமை) மாலை 7.30 மணியளவில், நுங்கம்பாக்கம், காம்தார்நகரில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, சட்டமன்ற உறுப்பினர், பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பாக பொறுப்பாளர்கள் மற்றும் வழக்கறிஞர் அணியை சார்ந்த நிர்வாகிகள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு தொகுதிப் பொறுப்பாளர் சைதை சாதிக் கேட்டுக்கொண்டுள்ளார்.*

### கே.ஏழுமலை, எஸ்.மோகன், மு. சத்தியா ஆலோசனை வழங்குகின்றனர்!

## 132 வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

### வட்டக் கழகச் செயலாளர் ந.மோ.முரளி அறிக்கை!

*சென்னை, நவ.20-*

*தியாகராயர் நகர் 132 வது வட்டக் கழகச் செயலாளர் ந.மோ.முரளி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, தியாகராயர் நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் ஆலோசனைக்கிணங்க 132 வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (20.11.2025 வியாழக்கி ழமை) இரவு 8 மணி அளவில் காமராஜர் காலனி 6வது தெரு சி பிளாக் அருகில் வட்ட அவைத் தலைவர் புலியூர்.எம் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெறுகிறது.*

*இந்த கூட்டத்தில் தமிழக துணை முதல்வர் சின்னவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது மற்றும் கழக பணிகள் குறித்து ஆலோசனை வழங்கப்படுகிறது.*


*இந்த கூட்டத்தில் கே. ஏழுமலை, எஸ்.மோகன், கோடம்பாக்கம் மு. சத்தியா ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.*

*எனவே 132 வது வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெங்களூர் வி. சிவசங்கர்
### நவம்பர் 20 (2003)



கருநாடக மாநில பொறுப்புக்குழுச் செயலாளராக பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் இருந்தவர்.

பெங்களூர் மாநகராட்சி அலசூர் வட்டத்தில் நான்கு முறை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். மாநகராட்சி சுகாதாரக்குழுவிற்கு தலைவராகவும் மற்ற காலங்களில் அனைத்து குழுக்களிலும் உறுப்பினராகவும் தேர்வு பெற்று பணியாற்றியவர்.

1997இல் கருநாடக மாநில அரசு, இவரது மாநகராட்சி மன்ற உறுப்பினர் பணியினை பாராட்டி “கெம்பே கவுடா” விருது வழங்கி பாராட்டியது.

மேலும் இவரது தொண்டினை போற்றும் வகையில் இவர் வசித்த அலசூர் பகுதியில் உள்ள முக்கிய சாலைக்கு “சிவசங்கர் சாலை” என பெயர் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

விலைவாசி உயர்வு, இந்தி எதிர்ப்பு ஆகிய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**